



# நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு 2025
# சுருக்க அறிக்கை

இலங்கை மத்திய வங்கி

**வெளியிடுபவர்:**

இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
இலங்கை

**கேள்விகள், கருத்துக்கள் மற்றும் பின்னூட்டங்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:**

பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
மின்னஞ்சல்: msd@cbsl.lk

# நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு 2025

# சுருக்க அறிக்கை

இலங்கை மத்திய வங்கி

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பொதுநோக்கு | 1 |
| பேரண்ட நிதியியல் நிலைமைகள் | 1 |
| நிதியியல் சந்தைகள் | 3 |
| நிதியியல் நிறுவனங்கள் | 5 |
| வீட்டலகுகள் மற்றும் கூட்டாண்மைத் துறைகள் | 8 |
| நிதியியல் உறுதிப்பாட்டிற்கான கொள்கைகள் | 9 |
| பேரண்ட பொருளாதார கொள்கைகள் | 9 |
| ஏனைய நிதியியல் துறை கொள்கைகள் | 11 |


## பொதுநோக்கு

*கடந்த அண்மைய காலங்களில் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியிலிருந்தான தொடர்ச்சியான பாதிப்புக்கள் மற்றும் உயர்வடைந்த உலகளாவிய நிச்சயமற்றத்தன்மைகளுக்கு மத்தியிலும் உள்நாட்டு பேரண்டபொருளாதார நிலைமைகளினதும் ஆரோக்கியமான நிதியியல் நிறுவனங்களினதும் சாதகமான முன்னேற்றங்களினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025இன் முதலரைப் பகுதியில் நிதியியல் துறையின் தாக்குபிடிக்கும்தன்மைத் தொடர்ந்தும் வலுவடைந்தது. 2025இன் முதலரைப் பகுதியில் மேம்பட்ட சந்தைத் திரவத்தன்மையுடன் நிதியியல் நிறுவனங்கள் வலுவான செயலாற்றமொன்றைக் காண்பித்த அதேவேளை செயற்றிறன்மிக்க கொள்கை வழிமுறைகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியதன் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, துறையின் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் முன்னேற்றங்களை எடுத்துக்காட்டியிருந்தன. முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் நிதியியல் சந்தைகளும் மேம்பட்ட செயலாற்றத்தைக் காண்பித்திருந்தன. அதேவேளை, வீட்டலகுகள் மற்றும் கூட்டாண்மைத் துறைகளின் ஐந்தொகைகள் மீதான அழுத்தம் தளர்வடையத்தொடங்கிய வேளையில் பட்டியலிடப்பட்ட நிதியல்லா கூட்டாண்மைகள், 2025இன் முதலரைப் பகுதியில் ஒட்டுமொத்த செயலாற்றத்தில் முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்தன. முன்னோக்கிச் செல்கையில், கொடுகடன் சுழற்சியின் விரிவாக்கக் கட்டத்துடன், ஏதாயினும் தோற்றம்பெற்றுவரும் இடர்நேர்வுகளை தாங்கும் பொருட்டு நிதியியல் துறையின் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதற்கு பேரண்ட மற்றும் நுண்பாக முன்மதியுடைய கட்டமைப்புக்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.*

## பேரண்ட நிதியியல் நிலைமைகள்

தீவிரமடைந்த உலகளாவிய நிச்சயமின்மைகளுக்கு மத்தியில், ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாடானது 2025இன் முதலரையாண்டு காலப்பகுதியில் உள்நாட்டு பேரண்ட நிதியியல் நிலைமைகளின் தொடர்ச்சியான மேம்பாடுகள் மூலம் ஆதரவளிக்கப்பட்டது. உள்நாட்டுப் பரப்பில், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை, பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம் மற்றும் சாதகமான வியாபார எண்ணப்பாங்குகள் என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு 2025இன் முதலரையாண்டில் கொடுகடன் வளர்ச்சி உயர்வடைந்தது. அதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார் துறை கொடுகடன் இடைவெளியின் விரிவடைதல், கொடுகடன் சுழற்சி தொடர்ந்தும் விரிவடைவதை சமிக்ஞைப்படுத்தி, முறைமைசார்ந்த இடர்நேர்வுகள் கட்டியெழுப்புப்படுவதை தொடர்ந்தும் கண்காணிப்பதற்கான தேவையை எடுத்துக்காட்டியது. எவ்வாறிருப்பினும், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார்துறை கொடுகடனானது நெருக்கடிக்கு முன்பிருந்த நிலைகளைக் காட்டிலும் மிகக் கீழேயே காணப்பட்டது. வங்கித்தொழில் துறையின் வைப்புக்கான கொடுகடன் விகிதத்தினூடாக எடுத்துக்காட்டப்பட்டவாறு முன்னர் குறைவடைந்திருந்த நிதியியல் இடையீடு, கடன் வழங்கலில் வங்கிகளின் அதிக நாட்டம் மற்றும்


வரைபடம் 1 வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் கொடுகடன் வளர்ச்சி




நிதிக்கம்பனிகள் துறைக் கொடுகடன் | வங்கித் தொழில்துறை கொடுகடன் | வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் கொடுகடன் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, வலது அச்சு)

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2 தனியார் துறை கொடுகடன் சுற்றுவட்டம்*





தனியார்துறை கொடுகடன் இடைவெளி (வலது அச்சு) | மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார்துறை கொடுகடன் | போக்கு-மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார்துறை கொடுகடன்

*கொடுகடன் தொடர்பிலான தரவு நாணய அளவீட்டின் மூலம் பெறப்பட்டது.($M_{2b}$)

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 3 உலக நிச்சயமற்றதன்மை




மூலம் : உலக நிச்சயமற்றதன்மை குறிகாட்டி தரவகம்*

*உலக நிச்சயமற்றதன்மை சுட்டெண் (WUI) தரவுத்தளம், எச்.அஹிர், என். ப்ளூம் ஆகியோரின் "The World Uncertainty Index" எனும் ஆய்வுக் கட்டுரையின் முறைமையியலை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய பொருளாதார ஆய்வு மையத்தின் ஆய்வுக் கட்டுரை 29763.

வியாபாரங்களினால் பதிவுசெய்யப்பட்ட கடனுக்கான வலுவான கேள்வி என்பவற்றுடன் படிப்படியாக மீட்சியடைந்து வருகிறது. மேலும், செயல்திறன்மிக்க நாணயக் கொள்கை சமிக்ஞை மற்றும் மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை என்பவற்றை பிரதிபலித்து, சந்தை வட்டி வீதங்கள் குறைந்த மட்டத்தில் உறுதியடைந்தன. பொருளாதார உற்பத்தியின் தொடர்ச்சியான விரிவடைதல்களுடன் குறைவடைந்த விலை மட்டங்கள் என்பவற்றினால் வீட்டலகுகளினதும் நிறுவனங்களினதும் ஐந்தொகைகளின் மீதான அழுத்தம் தளர்வடைந்தமையின் மூலம் நிதியியல் நிறுவனங்களின் கொடுகடன் தரத்தின் மேம்பாடானது ஆதரவளிக்கப்பட்டது. உயர்ந்த வருவாய்களால் ஆதரவளிக்கப்பட்டு, இறை செயலாற்றல் வலுவடைந்து, குறுக்கமடைந்த ஒட்டுமொத்த பற்றாக்குறை மற்றும் முதனிலை மிகை என்பவற்றை விளைவித்து, நிதியியல் உறுதிப்பாட்டினை நோக்கி சாதகமாக பங்களிக்கிறது. உலகளாவிய சூழ்நிலையில் தீவிரமடைந்த நிச்சயமின்மைகள் குறிப்பிடத்தக்களவிலான சவால்களை ஏற்படுத்தினாலும், இறக்குமதி அதிகரித்துவருவதற்கிடையிலும் நடைமுறைக் கணக்கு மிகையொன்றினை பதிவுசெய்து, வெளிநாட்டுத் துறையானது தொடர்ந்தும் தாக்குபிடிக்கும் தன்மையுடன் இருந்தது.

உலகளாவிய பொருளாதாரத்தில், தொடர்ச்சியான வர்த்தக ரீதியான பதற்றங்கள், தீர்வைத் திருத்தங்கள் மற்றும் தற்போதுள்ள பூகோள அரசியல் முரண்பாடுகள் என்பன முதலீட்டாளர்களின் எண்ணப்பாங்கு மீது குறிப்பிடத்தக்க நிச்சயமின்மையை உருவாக்கி, வழங்கல் சங்கிலி தடங்கல்களின் இடர்நேர்வுகளை உயர்த்தியுள்ளது. உலகளாவிய வளர்ச்சி தொடரும் என எறிவு செய்யப்பட்டுள்ள போதிலும், அது நோய்த்தொற்றுக்கு முந்திய சராசரிகளைக் காட்டிலும் குறைவாகவே காணப்பட்டு, தற்போதுள்ள சவால்களை பிரதிபலிக்கின்றது. உலகளாவிய வர்த்தக மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள் சீரற்றதாக காணப்பட்டு, 2025 இன் தொடக்கத்தின் முற்கூட்டிய தற்காலிக மிகைகள், படிப்படியாக மங்கலடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சாத்தியமான வழங்களில் ஏற்படக்கூடிய அதிர்வுகளிலிருந்தான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்பட்ட போதிலும், பண்ட விலைகள் மிதமடைந்து, இதன் மூலம் பல நாடுகளின் பணவீக்க அழுத்தங்களை தளர்வடையச்செய்தன. பொருளாதார வளர்ச்சிக் கரிசனைகளுடன், பணவீக்கத்தின் இடர்நேர்வுகளை சமப்படுத்துவதில் மத்திய வங்கிகள் எச்சரிக்கையாக இருக்கின்ற போதிலும், நாணயக் கொள்கை பொதுவாக தளர்வடையும் நிலைப்பாடொன்றினை நோக்கி நகர்ந்துள்ளது. இதற்கிடையில், உலகளாவிய நிதி நிலைமைகள் மேம்பட்டிருந்தாலும், மேம்பட்ட பொருளாதாரங்களில் உயர்ந்த மட்டத்திலான நாட்டிற்கான படுகடன் மற்றும் தொடர்ச்சியான இறை அழுத்தங்கள் என்பன பாதிக்கப்படும்தன்மைகளை உயர்ந்த மட்டத்திலேயே தொடர்ந்தும் பேணுகின்றன.

இவ் அபிவிருத்திகளுக்கு மத்தியில், இலங்கையின் பேரண்ட நிதியியல் தோற்றப்பாடு கரிசனைகளுக்கு மத்தியில் சாதகமாக காணப்படுகின்றபோதிலும், பாதகமான இடர்நேர்வுகளும் காணப்படுகின்றன. மிதமான பணவீக்கம், ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்தில் வலுவான இறை மற்றும் வெளிநாட்டு நிலுவைகள் என்பவற்றின் கூட்டிணைப்பானது மீட்சியை ஆதரவளிக்கும் பின்னணியொன்றினை வழங்குகின்றது. எவ்வாறாயினும், தாழ்வான உண்மை வருமானங்கள், சில துறைகளில் உயர்ந்த கட்டம் 3 கடன்கள் மற்றும் உயர்வடைந்த உலகளாவிய நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களின் சாத்தியமான உயர்வு உள்ளிட்ட சவால்கள் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, கொடுகடன் சுழற்சியின் விரிவாக்க கட்டத்திற்குள் வழிமுறைகளை நெருக்கமாக கண்காணித்தல் மற்றும் முனைப்புடன் நடைமுறைப்படுத்தல் என்பன நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதில் ஆதரவளிக்கும். மேலும், வலுவான பொருளாதார தாங்கிருப்புக்களை பேணுதல், தொடர்ச்சியான கொள்கை ஒழுங்காற்று மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் என்பவற்றின் ஊடாக மேம்படுத்தப்பட்ட தாக்குப்பிடிக்கும்தன்மையானது சாதகமான பேரண்ட நிதியியல் நிலைமைகளை உறுதிசெய்யும்.

## நிதியியல் சந்தைகள்


நிதியியல் அழுத்தக் குறிகாட்டியினால் கணிக்கப்பட்டதன்படி,[1] உள்நாட்டு நிதியியல் சந்தைகளின் அழுத்தம், 2024 ஓகத்தின் பிற்பகுதியில் அவதானிக்கப்பட்ட அதன் மேல்நோக்கிய போக்கினை மாற்றியமைத்து, 2024 ஒத்தோபரில் மிகக்கூடியளவிலான வீழ்ச்சியை குறித்து, பின்னர் பூஜ்ஜியத்திற்கு கீழே தொடர்ந்தும் காணப்பட்டது. வங்கித்தொழில்துறை பங்குகளின் தளம்பல்கள் வீழச்சியடைந்தமை அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் வீழ்ச்சியடைந்தமை மற்றும் பங்குச் சந்தையில் மேம்பட்ட செயலாற்றம் என்பன குறைந்த நிதியியல் அழுத்தச் சுட்டெண் மட்டங்களுக்கு பங்களித்தன.

பங்குரிமை மூலதனச் சந்தை 2025 சனவரி முதல் ஓகத்து வரையான காலப்பகுதியில் விலைச் சுட்டெண்களில் மேல்நோக்கிய போக்கொன்றினை தொடர்ச்சியாக எடுத்துக்காட்டியது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையுடன் இணைந்து, மேம்பட்ட உள்நாட்டு முதலீட்டாளர்களின் எண்ணப்பாங்குகள், சாதகமான பேரண்ட பொருளாதார நிலைமைகள் மற்றும் மேம்பட்ட நிறுவன வருமானங்கள் என்பன இவ் வளர்ச்சிக்கு ஆதரவளித்தன. சில்லறைத் துறை தொழிற்துறையில் துறைவாரியான செயல்திறன் குறிப்பாக வலுவாக இருந்தது. ஏட்டுப்பெறுமதிக்கான விலை அதன் நீண்டகால சராசரியை அண்மித்தது. அதேவேளை, வருவாய் விலை விகிதம் மெதுவாக அதிகரித்த போதிலும், அதன் நீண்டகால சராசரி மற்றும் பிராந்திய நாடுகளை விட கீழாக காணப்பட்டு, கூட்டாண்மைகளின் நிலையான செயலாற்றலில் தங்கியுள்ள சந்தையில் மேலதிக வளர்ச்சி வாய்ப்புக்களை எடுத்துக்காட்டியது. அதேவேளை, தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்து, சந்தை அபிவிருத்தியை ஆதரவளிப்பதற்கான புதிய மூலதன உட்பாய்ச்சல்களை ஈர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் காட்டுகின்றது.

தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை மற்றும் மேம்பட்ட இறை செயலாற்றலை பிரதிபலிக்கும் வகையில், மீளாய்வு காலத்தில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் வீழ்ச்சியடைந்து, ஒப்பீட்டளவில் உறுதியானதாகக் காணப்பட்டது. படுகடன் மறுசீரமைப்பு மற்றும் வழங்கல்கள் காரணமாக திறைசேரி முறிகளின் இருப்பு அதிகரித்ததுடன், சந்தை மிதமாக விரிவடைந்த அதேவேளை, திறைசேரி உண்டியல்களின் இருப்பு சுருக்கமடைந்தது. தாங்கிருப்பு நிதிகளின் முன்மதியுடைய முகாமைத்துவமானது குறுகிய கால படுகடனில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு உதவியது, இதன் மூலம் விளைவு வீதங்கள் மீதான மேல்நோக்கிய அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் அதேவேளை, கடன் மீள்வழங்கல் இடர்நேர்வுகளை குறைக்கின்றது. இரண்டாந்தரச்

1 பங்குரிமை மூலதனம், உள்ளூர் வெளிநாட்டு செலாவணி, அரச பிணையங்கள் மற்றும் உள்நாட்டு பணச் சந்தைகள் என்பவற்றிலிருந்து தோன்றிய கூட்டிணைந்த அழுத்தத்தை இந்த சுட்டெண் கணிக்கின்றது.


வரைபடம் 4 நிதியியல் அழுத்தக் குறிகாட்டி




நிதியியல் அழுத்தக் குறிகாட்டி (7 - நாள் சராசரி) — வரம்பு 1 (முதலாம் நியம விலகல்) — வரம்பு 2 (இரண்டாம் நியம விலகல்)

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி கொழும்பு பங்கு பரிவர்த்தனை புளூம்பெர்க்


வரைபடம் 5 பங்கு விலைச் சுட்டெண்




அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் — ஸ்டான்டட் மற்றும் புவர் இலங்கை 20 விலைச் சுட்டெண் (வலது அச்சு)


மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி கொழும்பு பங்குச் சந்தை

வரைபடம் 6
ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 7
இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள்





மூலம்: இலங்கை மத்திய வங்கி

சந்தை திரவத்தன்மை குறுகிய கால முதிர்வுகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. விளைவுவீத வளையியின் நீண்டகால முனைப்பகுதி செயல்பாடின்றி இருந்து, உயர்வடைந்த தவணை மிகைக்கு பங்களித்தது. அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடானது படிப்படியான அதிகரிப்பினைக் காட்டியது.

சுருக்கமடைந்த மனு மற்றும் கோரல்களுக்கிடையிலான இடைவெளி பரவல் (narrower bid-ask spread) மற்றும் அதிகரித்த வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல் அளவுகளாலும் பிரதிபலிக்கப்பட்டவாறு உள்ளூர் வெளிநாட்டு செலாவணி சந்தையில் திரவத்தன்மை மேம்பட்டது. இலங்கை ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்ததை தொடர்ந்து, சிறிதளவு தேய்மானம் அடைந்தது. அதிகரித்த இறக்குமதி கேள்வி, குறிப்பாக கட்டுப்படுத்தப்பட்ட வாகன இறக்குமதிக்கான கேள்வி மற்றும் பல்புடை படுகடன் மற்றும் பரஸ்பர பரிமாற்றல்களின் மீள்கொடுப்பனவுகள் என்பவற்றுக்கிடையிலும் அலுவல்சார் ஒதுக்கத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், மத்திய வங்கி தேறிய அடிப்படையில் வெளிநாட்டு நாணயத்தினை உள்ளீர்த்துக் கொண்டது. தற்போதைய உத்வேகத்தினை பேணுவதற்கு அரசாங்கத்திற்கும் தனியார் துறைக்குமான தொடர்ச்சியான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் முக்கியமானதாக காணப்படுகின்றன.

மீள்கொள்வனவு சந்தையானது அழைப்பு பணச் சந்தையை தொடர்ந்து விஞ்சிச் செல்வதுடன், மீள்கொள்வனவு மற்றும் அழைப்பு பணச் சந்தைகளில் அதிகரித்த நடவடிக்கைகளால் உந்தப்பட்டு, உள்நாட்டு பணச் சந்தை கொடுக்கல்வாங்கல் அளவுகள் அதிகரித்தன. அரசிற்கு சொந்தமான வங்கிகள் தேறிய கடன் வழங்குநர்களாக இருந்த அதேவேளை, உள்நாட்டு தனியார் வங்கிகள் தேறிய கடன் பெறுநர்களாக இருந்தனர். சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொடுப்பனவு வீதம் என்பன ஓரிரவு கொள்கை வீதத்துடன் பரந்தளவிற்கு இசைந்துச் சென்று, குறைந்த தளம்பல்களையும் இறுக்கமடைந்த பரவல்களையும் வெளிப்படுத்துகின்றன. அரசாங்க படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் மற்றும் நாணய எடுப்பனவுகளினால்

வரைபடம் 8
உள்நாட்டு பணச் சந்தை அளவுகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி


திரவத்தன்மை ஈர்த்துக்கொள்ளப்பட்டமைக்கிடையிலும் தேறிய வெளிநாட்டு செலாவணி கொள்வனவுகள் மற்றும் மேம்பட்ட அரசிறை திரட்டல் என்பவற்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு உள்ளூர் பணச்சந்தை திரவத்தன்மை மிகையாகக் காணப்பட்டது.

ஒட்டுமொத்தமாக, மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் நிதியியல் சந்தைகள் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் படிப்படியான முன்னேற்றத்தையும் காண்பித்துள்ளன. முன்னோக்கிப் பார்க்கையில், தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை என்பவற்றிற்கு ஆதரவளிப்பதற்காக பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டினை பேணுதல் இன்றியமையாததொன்றாகின்றது. நேர்மறையான உத்வேகத்தை அவதானிக்கும் அதேவேளை, பங்கு மற்றும் அரச பிணையங்கள் சந்தைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர் பங்கேற்பு, அரச பிணையங்களுக்கான இரண்டாந்தர சந்தையில் குறைந்தளவிலான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வர்த்தக மற்றும் பூகோள அரசியல் நிச்சயமின்மைகள் என்பவற்றில் சவால்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. உறுதிப்பாட்டினை பேணுவதற்கு வலுவான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள், சமநிலைப்படுத்தப்பட்ட சந்தை அபிவிருத்தி மற்றும் முன்மதியுடைய நாணய மற்றும் இறைக் கொள்கை முகாமைத்துவம் என்பன தேவைப்படுகின்றன. தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைந்த கொள்கை தலையீடுகள் என்பவை இடர்நேர்வுகளை தணிக்கவும், இயக்கவாற்றல்மிக்க உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிலைமைகளுக்கு மத்தியில் நிதியியல் சந்தைகளின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தவும் இன்றியமையாததவையாகும்.

## நிதியியல் நிறுவனங்கள்


2025இன் இரண்டாம் காலாண்டில் முடிவடைந்த ஆண்டுகாலப்பகுதியில், மேம்படுத்தப்பட்ட பேரண்டபொருளாதார நிலைமைகள் மற்றும் முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, நிதியியல் நிறுவனங்கள் உயர்ந்தளவு தாக்குபிடிக்கும்தன்மையை எடுத்துக்காட்டின. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையானது தனியார் துறை கொடுகடனில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு பங்களித்த அதேவேளை, மேம்பட்ட இறை நிலைமைகளுடன் இணைந்து நிறைவடையும் நிலையிலுள்ள படுகடன் மறுசீரமைப்பானது, பொதுத் துறைக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகையை குறைப்பதற்கு உதவியது. முன்கூட்டிய கொள்கை வழிமுறைகள் பல நிதியியல் நிறுவனங்களிடையே திரவத்தன்மை, இலாபத்தன்மை, மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை போன்றவற்றில் மேலும் மேம்பாடுகளுக்கு வழிவகுத்தன. இத்தகைய சாதகமான அபிவிருத்திகள் இருந்தபோதிலும், குறிப்பாக கொடுகடன் இடர்நேர்வுடன் தொடர்புடைய பாதிப்புகள் காணப்பட்டு, உன்னிப்பான மேற்பார்வை மற்றும் வலுவான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் போன்றவற்றுக்கான தொடர்ச்சியான தேவையினை எடுத்துக்காட்டின.

வரைபடம் 9 வங்கித் தொழில்துறையின் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்





மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 10 வங்கித் தொழில்துறையின் கட்டம் 3 கடன் விகிதம்





மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 11 வங்கித் தெரிழில்துறையின் வரிக்குப் பின்னரான இலாபம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 12 வங்கித் தொழில்துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள்





மூலம்: இலங்கை மத்திய வங்கி

மீளாய்விற்குரிய காலப்பகுதியில், வங்கித்தொழில் உறுதித்தன்மைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட மேல்நோக்கிய போக்கு வங்கித்தொழில் துறையின் முன்னேற்றகரமான செயலாற்றத்தை எடுத்துக்காட்டியது. தனியார் துறைக்கான அதிகரித்த கடன்வழங்கலினால் தூண்டப்பட்டு, 2025இன் முதலாம் அரையாண்டில் கொடுகடன் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்தமை, கொடுகடனிற்கான வலுவான கேள்வியினையும், துறையினுள் மேம்பட்ட தொழிற்பாட்டுச் செயலாற்றத்தையும் பிரதிபலித்தது. கட்டம் 3 கடன்கள் விகிதம்[2] வீழ்ச்சியடைந்தமையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, சொத்துத்தரத்தின் படிப்படியான முன்னேற்றத்திற்கான சமிக்ஞைகளைக் காண்பித்தது. எனினும், கட்டம் 3 கடன்கள் விகிதம் உயர்வடைந்த மட்டமொன்றில் காணப்பட்டது. கட்டம் 3 பெறுமதியிழப்பிற்கான காப்பு வலுவடைந்து, சாத்தியமானக் கொடுகடன் இழப்புக்களைத் தணிப்பதற்கும் கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு எதிராகத் தாங்கிருப்புக்களை வலுப்படுத்துவதற்குமான வங்கிகளின் முன்கூட்டிய முயற்சிகளைப் பிரதிபலித்தது. அதேவேளை, அரசப் பிணையங்களில் தொடர்ந்தும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, அரசு-வங்கித் தொடர்பிணைவு பெருமளவில் காணப்பட்டு, அரசுடனான துறையின் ஒன்றுடனொன்று கொண்டிருக்கும்


2 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்கள் 9 இன் (IFRS 9) கட்டமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டம் 3 கடன்கள் விகிதமானது செயற்படாக் கடன்கள் விகிதத்தைப் பிரதிபலிக்கும் குறியீடொன்றாக கருதப்படலாம்.

வரைபடம் 13 நிதிக் கம்பனிகள் துறையின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 14 நிதிக்கம்பனிகள் துறையின் கட்டம் 3 கடன்கள் விகிதம்





மூலம்: இலங்கை மத்திய வங்கி

இணைப்பினை எடுத்துக்காட்டியது. எவ்வாறிருப்பினும், அரசு மற்றும் அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள், வங்கித்தொழிற் துறையின் மொத்தக் கொடுகடன் சொத்துப் பட்டியலின் பங்கில் உள்ள விகிதமாக, குறைந்துவரும் போக்கினைக் காட்டியுள்ளது.

ரூபாய் திரவத்தன்மை காப்பு விகிதத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு, பிரதானமாக கொடுகடன் சொத்துப்பட்டியல் விரிவடைந்ததன் காரணமாக, வங்கித்தொழில் துறையின் ரூபாய் திரவத்தன்மை 2025இன் இரண்டாம் காலாண்டில் முடிவடைந்த ஆண்டுக்காலப்பகுதியில் சிறிதளவில் மிதமடைந்தது. நிதியிடல் செலவுகளின் குறிப்பிடத்தக்க குறைப்பிற்கு மத்தியில் தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சியினால் பெருமளவில் ஆதரவளிக்கப்பட்டு, வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை 2025இன் முதலாம் அரையாண்டில் கணிசமானளவு முன்னேற்றமொன்றைக் காண்பித்தது. 2024இன் இரண்டாம் காலாண்டிலிருந்து நிறுத்திவைத்த இலாபங்கள் மற்றும் மேலதிக அடுக்கு 2 மூலதன வழங்கல்கள் போன்றவற்றினூடாக வலுவான உள்ளக மூலதன உருவாக்கத்தினால் உறுதிநிலையடைந்து, மூலதனப் போதுமாந்தன்மை மேலும் வலுவடைந்து, இதனூடாக வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த தாக்குபிடிக்கும் தன்மை மேம்படுத்தப்பட்டது. மேலும், துரிதமான எண்ணியமயமாக்கலிற்கு மத்தியில், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப்பாதுகாப்பிலிருந்து உருவாகும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டிற்கும் அதேபோன்று ஒட்டுமொத்த நிதியியல் முறைமைக்கும் தொடர்ந்தும் சவால்களை ஏற்படுத்தின.

சாதகமானப் பேரண்டபொருளாதார நிலைமைகள் மற்றும் அதிகரித்துவரும் கொடுகடன் கேள்வி போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025இன் இரண்டாம் காலாண்டிறுதியில் முடிவடைந்த ஆண்டுக்காலப்பகுதியில் நிதிக் கம்பனிகள் துறை உறுதியான வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. சந்தை வட்டி வீதங்களின் தளர்வு மற்றும் மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல் போன்றவற்றின் மூலம் தூண்டப்பட்டு, வாகனத்தால் பிணையளிக்கப்பட்ட கடன்களுக்கான கேள்வி குறிப்பிடத்தக்களவு அதிகரித்து, 2025இன் இரண்டாம் காலாண்டிறுதியில் கொடுகடன் வளர்ச்சி சடுதியாக உயர்வடைந்தது. உலகச் சந்தையில் அதிகரித்த தங்க விலைகளுக்கு மத்தியில் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் தங்கத்தால் பிணையளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மீதான துறையின் செறிவு அதிகரித்தது. மொத்த கட்டம் 3 கடன்களின் வீழ்ச்சி மற்றும் கடன் சொத்துப்பட்டியலின் துரிதமான விரிவாக்கம் என்பவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, துறையின் சொத்துத் தரம் மேம்பட்டு, குறைந்தளவான கட்டம் 3 கடன்கள் விகிதத்தை எடுத்துக்காட்டியது. அதேநேரத்தில், கட்டம் 3 கடன்களின் பெறுமதியிழப்பு காப்பு அதிகரிக்கப்பட்டு, இதன்மூலம் சாத்தியமான கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு எதிராக தாங்கிருப்புக்கள் பேணப்பட்டது. திரவத்தன்மை சொத்துக்கள் தொடர்ந்தும் ஒழுங்குமுறைப்படுத்தல் எல்லையை விஞ்சியதுடன் திரவத்தன்மை வலுவடைந்து, காலப்பகுதி முழுவதும் மிகையொன்றை உறுதிசெய்தது. முக்கியமாக, விரிவடைந்த கடன் ஏட்டிலிருந்தான உயர்ந்தளவான வட்டி வருமானத்தின் காரணமாக 2025இன் இரண்டாம் காலாண்டில் துறையின் இலாபத்தன்மை குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டது. துரிதமான கொடுகடன் வளர்ச்சியிலிருந்து ஏற்படும் இடர்நேர்வு ஏற்றப்பட்ட சொத்துகளின் அதிகரிப்பு காரணமாக மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்த போதிலும் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை பரந்தளவில் தாக்குபிடிக்கும் தன்மையுடன் காணப்பட்டது. நிதியியல் நிறுவனத் துறையின் ஒட்டுமொத்தச் செயலாற்றம் காலப்பகுதியில் மேம்பட்ட அதேவேளை, துரிதமான கொடுகடன் விரிவாக்கம் மற்றும் பிணைத் திரட்சி போன்றவற்றிலிருந்து வெளிப்படும் சாத்தியமான பாதிப்புக்கள் தொடர்பில் தொடர்ச்சியான விழிப்புணர்வு அவசியமாகும்.

வரைபடம் 15
மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு)




மூலம்: இலங்கை காப்புறுதி ..... ஆணைக்குழு

பொதுக் காப்புறுதி துணைத்துறையில் ஏற்பட்ட மீட்சியினால் தூண்டப்பட்டு, காப்புறுதித் துறையின் சொத்துத் தளம் 2025இன் இரண்டாம் காலாண்டிறுதியில் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்த அதேவேளை, நீண்டகால காப்புறுதி சொத்துக்கள் தொடர்ந்தும் சீராக வளர்ச்சியடைந்தன. 2025இன் முதலாம் அரையாண்டில் சிறிதளவு முன்னேற்றத்திற்கு மத்தியிலும் நாட்டின் காப்புறுதி ஊடுருவல் குறைந்தளவிலேயே காணப்பட்டது. பொதுக் காப்புறுதிப் பிரிவின் வரிக்கு முன்னரான இலாபம் அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்திருந்த போதிலும், இலாபத்தன்மை குறிகாட்டிகள் இரு துணைத்துறைகளிலும் வீழ்ச்சியடைந்திருந்தன. துறையின் உறுதிப்பாட்டைத் தொடர்ந்தும் நிலையுறுத்திப்படுத்தும் வகையில், பொது மற்றும் நீண்டகால காப்புறுதித் துறை கூறுகள் ஆகிய இரண்டிலுமுள்ள ஒட்டுமொத்த மூலதன நிலைமைகள் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலாக மேம்பட்டு காணப்பட்டபோதிலும், பொதுக் காப்புறுதி துணைத்துறையின் மூலதனப் போதுமாந்தன்மை சிறிதளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.

## வீட்டலகுத்துறை மற்றும் கூட்டாண்மைத் துறைகள்[3]

குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் மேம்படுகின்ற பேரண்டபொருளாதார நிலைமைகள் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, வீட்டலகுத்துறை[4] மற்றும் நிறுவனரீதியிலான துறைகளுக்கான[5] கொடுகடன் 2025இன் முதலாம் அரையாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2024இலிருந்து வீட்டலகுத்துறை கொடுகடன் அதன் மேல்நோக்கிய உத்வேகத்தைத் தொடர்ந்து, நெருக்கடிக்கு முந்தைய மட்டங்களை விஞ்சிக்காணப்பட்டது. படிப்படியாக மேம்பட்டுவரும் பொருளாதார நிலைமைகள் மற்றும் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலையினால் ஆதரவளிக்கப்பட்டு, வீட்டலகுத்துறையிலுள்ள கொடுகடன் கேள்வியின் நிலையான அதிகரிப்பை இப்போக்கு எடுத்துக்காட்டுகின்றது. மேலும், 2025இன் முதலாம் அரையாண்டில் நிறுவனத்துறைக் கொடுகடனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, மொத்த வீட்டலகுத்துறை கொடுகடனில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ள வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கொடுகடனுடன் தொடர்புடைய செயற்படாக் கடன் விகிதங்களில்[6] அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன், 2024 நடுப்பகுதியிலிருந்து,


3 இந்தப் பகுதியில் தரப்பட்டுள்ள தரவு கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் கொழும்பு பங்குச் சந்தையிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. எனவே, இப்பகுதியில் அறிக்கையிடும் தரவுகளை “பின்னெட்” (FinNet) தரவு மையத்தை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான பகுதியுடன் நேரடியாக ஒப்பிட முடியாது.

4 இப்பகுப்பாய்வில் தரப்பட்டுள்ள வீட்டலகுத்துறை படுகடன் கொடுகடன் தகவல் பணியகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற மொத்த கொடுகடன் தகவல்களை அடிப்படையாகக் கொண்டதுடன், தனிப்பட்டவர்களின் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கம் என்பவற்றினூடாக அடையாளங்காணப்பட்ட தனிப்பட்டவர்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கின்றதுடன், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கமைவாக வியாபார நடவடிக்கைகளுக்கு வீட்டலகுத்துறையினரினால் பெற்றுக்கொள்ளப்படும் கடன்பெறுகைகளும் உள்ளடக்கப்படலாம்.

5 அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் அரசாங்கம் போன்றவற்றுக்கான கடன்கள் மற்றும் வியாபார நிறுவனங்களுக்காக பெற்றுக்கொள்ளப்படும் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் கடன்கள் மற்றும் முற்பணங்களை நிறுவனரீதியிலான துறை படுகடன்கள் உள்ளடக்குகின்றன.


6 90 நாட்கள் கடந்தும் மீள்கொடுப்பனவு செய்யப்படாத கடன்களை இப்பகுப்பாய்வானது செயற்படாக் கடன்களாக வகைப்படுத்துகின்றது.

வரைபடம் 16
வீட்டலகுத்துறை கொடுகடன்





மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

வரைபடம் 17
வீட்டலகுத்துறையின் செயற்படாக் கடன் விகிதங்கள்





மூலம்: இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

வரைபடம் 18 நிதியல்லா கூட்டாண்மைகளின் வருமானம் மற்றும் வருமானத்தின் வளர்ச்சி




மூலம்: கொழும்புப் பங்குச் சந்தை

வரைபடம் 19 நிதியல்லா கூட்டாண்மைகளின் முக்கிய நிதியியல் குறிகாட்டிகள்




மூலம்: கொழும்பு பங்குச் சந்தை

வீட்டலகுத்துறையில் காணப்படும் செயற்படாக் கடன்கள் விகிதங்களும் படிப்படியான வீழ்ச்சியொன்றைக் காண்பித்துள்ளன. மேலும், முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2025இன் முதலாம் அரையாண்டில் நிறுவனரீதியிலான துறையும் செயற்படாக் கடன்கள் விகிதத்தில் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. நிலவும் சாதகமான வட்டி வீதங்கள் மற்றும் பேரண்டபொருளாதார நிலைமைகள் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, வீட்டலகுத்துறையிலும் நிறுவனரீதியிலான துறைகளிலும் எதிர்வரும் காலத்தில், கொடுகடன் விரிவாக்கத்திற்கு மேலும் இடமிருப்பதாக தெரிகின்றது. மேலும், உள்நாட்டு பேரண்டபொருளாதார நிலைமைகளில் தற்போதுள்ள மீட்சிக்கமைவாக வீட்டலகுத்துறை மற்றும் நிறுவனங்களின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் தொடர்ந்தும் வலுவடைந்துவருவதனால், இரு துறைகளிலுமுள்ள செயற்படாக் கடன்கள் விகிதம் மேலும் வீழ்ச்சியடையக்கூடும்.

பொருளாதாரத்தில், நிதியியல் பணிகளின் முக்கிய வாடிக்கையாளரான பட்டியலிடப்பட்ட நிதியல்லா கூட்டாண்மைகள், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2025இன் முதலாம் அரையாண்டில் ஒட்டுமொத்த செயலாற்றத்தில் முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்தன. பட்டியலிடப்பட்ட நிதியல்லாக் கூட்டாண்மைகளின் வருமானம் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்த அதேவேளை இலாபத்தன்மை குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டது. குறைந்தளவான சந்தை வட்டி வீதங்கள் மற்றும் மேம்பட்டுவரும் பேரண்டபொருளாதார நிலைமைகள் போன்றன நிதியல்லா கூட்டாண்மைகளின் அதிகரித்த இலாபத்தன்மைக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தன. மேலும், மொத்த இலாபம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றின் அதிகரிப்பும் இலாபத்தன்மையில் காணப்படும் மேம்பாடுகளில் முக்கிய பங்காற்றின. அனைத்து துறைகளுக்குமான வட்டி காப்பு விகிதம் ஒன்றுக்கு மேல் காணப்பட்டு, காலப்பகுதியில் அதிகரித்த இலாபத்தன்மையினால் ஆதரவளிக்கப்பட்ட மேம்பட்ட கடன் நம்பகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. நிதியல்லாக் கூட்டாண்மைகளுக்கு மத்தியில் மேம்பாடடைந்த படுகடன் மீள்கொடுப்பனவு இயலாற்றலானது நிதியியல் நிறுவனங்களின் துறைக்கான வெளிப்படுத்துகையின் சொத்துத் தரத்தை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம், ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாட்டிற்கும் பங்களிக்கும். மேலும், மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபார நிலைமை அளவீட்டில் பிரதிபலிக்கப்பட்டவாறு, வியாபார நிலைமைகள் மற்றும் தோற்றப்பாடு என்பன 2025இன் முதலாம் அரையாண்டு முழுவதும் சாதகமாகக் காணப்பட்டன. எதிர்வரும் காலத்தில் இத்தகைய சாதகமான மனோபாவங்கள் தொடர்ந்தும் நிலைத்திருக்குமெனின், நிதியல்லா கூட்டாண்மைகளின் செயலாற்றத்தையும் நம்பகத்தன்மையையும் மேலும் இவை வலுப்படுத்தக்கூடும்.

## நிதியியல் உறுதிப்பாட்டிற்கான கொள்கைகள்


### பேரண்டமுன்மதியுடைய கொள்கைகள்

மீளாய்விற்குரிய காலப்பகுதியில், மத்திய வங்கியானது அதன் பேரண்டமுன்மதியுடைய கொள்கைக் கட்டமைப்பினை வலுப்படுத்தி நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு ஆதரவுவழங்கியதுடன் உறுதிப்பாட்டையும் பேணியது. 2025 ஏப்பிறலில், உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளை குறித்துரைப்பதற்கான

பிரமாணங்கள் மேம்படுத்தப்பட்டன. இதற்கமைவாக, அவ் உரிமம்பெற்ற வங்கிகளின் இழப்பினை ஈர்த்துக்கொள்ளும் இயலாற்றலை வலுப்படுத்தியதனூடாக பாதகமான அதிர்வுகளுக்கான அவற்றின் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்ட பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு மத்திய வங்கியினால் உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளாக ஐந்து வங்கிகள் குறித்துரைக்கப்பட்டன. ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டுடன் உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளின் மீளாய்வு ஆண்டுதோறும் நடாத்தப்படும். அதேவேளை, மத்திய வங்கி மோட்டார் வாகனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் பெறுமதிக்கான கடன் விகித உச்சவரம்புகளை திருத்தம்செய்தது. இது பேரண்டமுன்மதியுடைய குறிக்கோள்களை அடைந்து

வரைபடம் 20

**2015 இலிருந்து பெறுமதிக்கான கடன் கட்டமைப்பின் பரிணாமம்**




அட்டவணை 1

**மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் கடன் வசதிகளின் பெறுமதிக்கான கடனளவு விகிதத்தின் உச்ச வரம்புகள்**

| ஊர்தி வகை | | மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வகைப்படுத்தலுக்கமைவாக வாகன வகுப்பு | பெறுமதிக்கான கடன் விகிதம் |
|---|---|---|---|
| ஒரு வருடத்திற்கும் குறைவாக, இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத மற்றும் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் | வர்த்தக போக்குடைய வாகனங்கள் | B இன் கீழ் வகைப்படுத்தப்படுதல் C1, C, CE, D1, D, DE,G1, G, J மற்றும் இலகு பார வண்டிகள் | 80% |
| | உந்துகார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (SUV), மற்றும் வான்கள் | B (இன் வகுப்பு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 60% |
| | முச்சில்லு வண்டிகள் | B1 | 50% |
| | வேறு ஏதேனும் ஊர்திகள் | A1, A மற்றும் B இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர | 70% |
| ஒரு வருடத்திற்கும் அதிகமாக இலங்கையில் பயன்படுத்தப்பட்டன பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் (வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகள் ஆகிய இரண்டும்) | | | 70% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

முன்மதியுடைய கொடுகடன் நியமங்களை மீள்வலுப்படுத்துவதில் அவற்றின் செயற்றிறனை மேம்படுத்தும். பல்வேறு பேரண்டமுன்மதியல்லாத ஏனைய நோக்கங்களுக்காக கடந்த காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பெறுமதிக்கான கடன் விகிதங்களின் உச்சவரம்புகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதையும் இத்திருத்தங்கள் இலக்காகக் கொண்டிருந்தன.

## ஏனைய நிதியியல் துறைக் கொள்கைகள்

பேரண்டமுன்மதியுடைய கொள்கைகளுக்கு மேலதிகமாக, மத்திய வங்கியானது ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கு பலதரப்பட்ட கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. இதற்கமைவாக, அரச வங்கிகள் உள்ளடங்கலாக அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளின் ஆளுகைச் செயன்முறைகளையும் நடைமுறைகளையும் மேலும் வலுப்படுத்துவதற்கு 2024 செத்தெம்பரில் "உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை" மீதான பணிப்புரைகளை மத்திய வங்கி வழங்கி, இதனூடாக, வங்கித்தொழில் துறையினதும் நிதியியல் முறைமையினதும் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்த தன்மையையும் ஊக்குவிப்பதற்காக பொறுப்புமிக்கதும் வகைகூறும் விதத்தில் வங்கித்தொழிலை நடாத்துவதற்கு வசதிப்படுத்தியது. அதேவேளை, நிதிக்கம்பனிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பானது மேலும் வலுவாக்கப்பட்டு, துறையில் இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு தரநியமங்களை நிர்ணயிப்பதில் கவனம்செலுத்தியது.

மீளாய்விற்குரிய காலப்பகுதியில், நிதிக்கம்பனிகளை உள்ளடக்கி 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை விரிவுபடுத்தல், தீர்மானக் கொள்கைகள், தொழிற்பாட்டு கைநூல்கள் போன்றவற்றை அபிவிருத்திசெய்தல், உரிய நேரத்தில் தலையிடுவதை உறுதிப்படுத்தி நிதியியல் முறைமையில் இடையூறுகளை குறைப்பதற்கான தீர்மானத் தூண்டுதல்களைத் தாபித்தல் போன்றவற்றின் மூலம் நாட்டிற்கான தீர்மானக் கட்டமைப்பு மேலும் வலுவாக்கப்பட்டது. மேலும், நிதியியல் முறைமையின் மீதான பொதுமக்கள் நம்பிக்கையை பாதிக்கக்கூடிய நிதியியல் மோசடிகள், ஊழல்கள், மற்றும் இணைய அச்சுறுத்தல்கள் போன்ற தோற்றம்பெற்றுவரும் நிகழ்வுகளுக்குப் பதிலிறுத்தும் வகையில், எண்ணியல் கொடுப்பனவு பாதுகாப்பினை மேம்படுத்தி அத்துடன் நிதியியல் வாடிக்கையாளர் பாதுப்பினை வலுப்படுத்துவதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கான முன்கூட்டிய வழிமுறைகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி அதன் சந்தை நடத்தைக்கான மேற்பார்வை பணியை குறிப்பிடத்தக்களவில் விரிவுபடுத்தி, தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களை ஒழிப்பதற்கு அதன் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியது. இதற்கு மேலதிகமாக, தகவல்களைப் பகிர்ந்துகொள்வதை மேம்படுத்தல், உரிய விழிப்புக்கவனத்தை மேம்படுத்தல், சனாதிபதியின் பணிப்புரையின் கீழ் பணம்தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய செயலணியை மீள்கட்டமைத்தல், அத்துடன் பன்னாட்டு தரநியமங்களுடன் அணிசேரும் வகையில் சட்டத்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளுக்கு தீர்வுகாணுதல் போன்றவற்றின் மூலம் இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பையும் மத்திய வங்கி வலுப்படுத்தியது. மேலும், மத்திய வங்கியானது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினூடாக இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் அறிவை மேம்படுத்தி, இலக்கிடப்பட்ட நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் மூலம் தகவலறிந்த நிதியியல் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கு பன்முக ஆர்வலர்களுடன் கூட்டிணைந்து, நிதியியல் அறிவு வழிகாட்டலை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இதற்கு மேலதிகமாக, நிலைபெறத்தக்க நிதியியல் வழிகாட்டல் 2.0 இனை மற்றும் தொடர்புடைய இயலாற்றலை விருத்திசெய்தல் நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குதல் என்பன நாட்டின் சூழல் மற்றும் சமூக இலக்குகளுடன் அணிசேர்வதில் நிதியியல் நிறுவனங்களை வழிநடாத்திய அதேவேளை நிதியியல் முறைமையின் நிலைபெறத்தக்கத்தன்மையையும் தாக்குபிடிக்கும்தன்மையையும் வலுப்படுத்தியிருந்தன.

முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீட்சியடைவதால், தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்களானவை, அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கொடுகடன் சுழற்சிவட்டத்தை மேலும் விரிவாக்கக் கட்டத்திற்குள் நகர்த்தி புதுப்பிக்கப்பட்ட உத்வேகத்துடன் இடர்நேர்வேற்பினை

உச்சப்படுத்துமென்பதால் கொடுகடனில் ஏற்படும் இந்த அதிகரிப்பை மத்திய வங்கி நெருக்கமாக கண்காணிக்கும். இதற்கு மேலதிகமாக, இறக்குமதி கட்டுபாடு தளர்வுக்கு பின்னர் மோட்டார் வாகன இறக்குமதிக்கான அதிகரித்து வரும் கேள்வி, பூகோள அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் தங்கம் போன்ற பாதுகாப்பான புகலிட சொத்துக்களின் உலகளாவிய விலை அதிகரிப்பு போன்றன, அத்தகைய சொத்துக்களால் பிணையிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றிற்கான தாக்கங்களை கொண்டிருக்கும். மத்திய வங்கியானது, சாத்தியமான பாதிப்புகளை அடையாளம் காணவும், உடனடியாக பொருத்தமான பேரண்ட முன்மதியுடைய மற்றும் நுண்பாக முன்மதியுடைய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தவும், சொத்து சந்தைகளிலும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு பேரண்ட பொருளாதார நிலைமைகளிலும் இத்தகைய அபிவிருத்திகளை தொடர்ந்தும் கண்காணித்து, நிதியியல் முறைமையின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை உறுதிசெய்கின்றது.